ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.03.15 |


# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 பெப்புருவரி

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 பெப்புருவரியிலும் விரிவடைந்தன

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2022 பெப்புருவரியில் 52.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து தொடர்ந்தும் விரிவடைந்தது.** புதிய கட்டளைகளில் தொடர்ச்சியான விரிவடைதல் இம்மேம்பாட்டிற்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், உற்பத்தி, கொள்வனவுகளின் இருப்பு, தொழில்நிலை என்பன வீழ்ச்சியடைந்த அதேவேளை வழங்குநர் விநியோக நேரம் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் நீட்சியடைந்தது.

எதிர்வரவுள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பருவகாலத்தை எதிர்பார்த்து, 2022 பெப்புருவரியில் புதிய கட்டளைகளில் குறிப்பாக உணவு மற்றும் குடிபானத் தயாரிப்பில் விரிவடைதல் அவதானிக்கப்பட்டது. எனினும், உற்பத்தியானது பெப்புருவரியில் குறைந்தளவான வேலைநாட்கள் காணப்பட்டமையினால் பருவகால மாதிரியைத் தொடர்ந்தும் வழங்கல்பக்க தடைகள் காரணமாகவும் விசேடமாக உணவு மற்றும் குடிபானம், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. மேலும், வழங்கல்பக்க தடைகள் காரணமாக கொள்வனவுகளின் இருப்பு வீழ்ச்சியடைந்தது. நாணயக் கடிதங்களை திறப்பதில் தாமதங்கள் காரணமாக இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களையும் பொதியிடும் பொருட்களையும் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்ததாக பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **58.7** | **52.5** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 62.2 | 59.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 59.8 | 45.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 55.2 | 46.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 55.7 | 47.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.6 | 63.6 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் தொடர்ச்சியான மேம்பாடுகளை எதிர்பார்த்து உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 52.5**

2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 6.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2022 சனவரியிலிருந்து 0.4 சுட்டெண் புள்ளிகளினால் அதிகரித்து 2022 பெப்புருவரியில் 53.6 இனை எட்டியது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்புருவரியில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் அதிகரித்தது. எனினும், சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்புருவரியில் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்த அதேவேளை ஐரோப்பிய வலயத்தின் கொ.மு.சுட்டெண் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2022 மாச்சு 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது, 2022 பெப்புருவரியில் 51.8 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து பணிகள் துறை முழுவதும் சிறிதளவான வளர்ச்சியொன்றினை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் ஆகிய துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இச்சிறியளவான அதிகரிப்புக்கு துணையளித்திருந்தன.

2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதிச் சேவைகள், தொழில்சார் பணிகள், உண்மைச் சொத்து, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2022 பெப்புருவரியில் மெதுவான வேகத்தில் உயர்வடைந்தன.

பல்வேறு துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் தொழில் நடவடிக்கைகள் பெப்புருவரியில் மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. அதற்கமைய, நிதியியல் பணிகள், கல்வி, தொழில்சார் பணிகள், வேறு தனிப்பட்ட நடவடிக்கைகள், உண்மைச் சொத்து மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இதற்கு மேலதிகமாக, மாதத்தின் பிந்திய காலப்பகுதியின் போது எரிபொருள் மற்றும் மின்சார வழங்கல்களுக்கான இடையூறுகளிலிருந்து தோன்றிய இடைத்தடங்கல்களுக்கு மத்தியிலும் சுற்றுலாப் பயணி வருகைகள் நிலையாக அதிகரித்தமை காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகளும் சிறிதளவு வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. எவ்வாறிருப்பினும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் துணைத் துறையானது மாதகாலப்பகுதியில் சீர்குலைவொன்றினை அவதானித்தது.

ஓய்வுபெறுதல்கள் மற்றும் அதிகரிக்கின்ற எண்ணிக்கையான பதவி விலகுதல் காரணமாக, தொழில்நிலையானது மூன்று மாத அதிகரிப்பின் பின்னர் முதந்தடவையாக பெப்புருவரியில் சற்று வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் உயர்வான வேகத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.5** | **51.8** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 57.5 | 55.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 62.0 | 56.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 47.0 | - | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 47.4 | 46.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 68.5 | 54.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

செலாவணி வீதத்தினை மிதக்கவிடுதல் அத்துடன் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல் என்பவற்றைத் தொடர்ந்து, செலவு அழுத்தங்கள் அதேபோன்று வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறை அதன் வியாபார எதிர்கால வாய்ப்பு சீர்குலையுமென எதிர்பார்த்தமையினால் அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மிகவும் மெதுவான வேகத்திலேனும் பெப்புருவரியில் மேம்பட்டது. மேலும், எரிபொருள், மின்சாரம், திரவப் பெற்றோலிய எரிவாயு வழங்கல் என்பவற்றுடன் இணைந்த நிச்சயமின்மைகள் அநேகமான துணைத் துறைகளை எதிர்மறையாகப் பாதித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 51.8**

2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 5.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 சனவரியின் 51.0 இலிருந்து 2022 பெப்புருவரியின் 53.9 இனைப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் விரிவடைதல் ஒன்றினைக் காண்பிக்கின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 பெப்புருவரியில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], மாச்சு 14, 2022 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.